# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 105/ந/2019**

**நாள் : 19/02/2020**

**திரு M. கருணாகரன்,**
**தாராபுரம் – 638 657.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தாராபுரம் நகராட்சி,**
**தாராபுரம் – 638 657.** – **எதிர் மனுதாரர்**

திருப்பூர் மாவட்டம், தாராபுரம், எல்லீஸ் நகர் அஞ்சல், அசோக் நகர், 180/32–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. கருணாகரன் என்பவரின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.07.2019 அன்று பெறப்பட்டு 105/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

திருப்பூர் மாவட்டம், தாராபுரம், எல்லீஸ் நகர் அஞ்சல், அசோக் நகர், 180/32–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. கருணாகரன் என்பவர் நகராட்சி ஆணையர் மீது கீழ்க்காணும் குற்றமுறையீடுகளைத் தெரிவித்து துறைரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(1) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு 28.01.2019 நாளிட்ட கடிதம் எண்.5844/2018/இ1–இல் காம்பவுண்ட் சுவர் இடிக்கப்பட்டு அதிலிருந்த கருங்கற்கள் புதிதாக கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவருக்கு அடித்தளமாகப் பயன்படுத்தப்பட்டது என்று பொய்த் தகவல் அளித்தது ;

(2) சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண்.8497/2018—இல் சம்பந்தப்பட்ட பிரமாண பத்திரத்தில் உண்மைச் சம்பவங்களை மறைத்து தவறான தகவலை அளித்து இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 340 உடன் படிக்க குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 195—இன் உட்பிரிவுகளின் படியான தண்டனைக்குரிய குற்றத்தினை செய்ததற்காக துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளக் கோருவது.

2. மனுதாரரின் குற்ற முறையீடுகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. தாராபுரம் புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் நடத்தக்கூடாது என வரி செலுத்துவோர் சங்கத்தினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் பெறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் திரு இரா. வெள்ளையங்கிரி என்பவருக்கு 01.10.2018 முதல் 31.09.2021 முடிய மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டதென்றும், பொதுமக்களுக்கு பயன்பாடு இல்லாமல் புதர்கள் இருந்த பகுதி சுத்தம் செய்யப்பட்டு இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டது என்றும், அப்பொழுது அவ்விடத்தில் இருந்த சுவர் அகற்றப்பட்டபோது அச்சுவற்றின் கற்கள் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றுச் சுவர் பணிக்கு பயன்படுத்தப்பட்டது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 27.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை தாக்கல் செய்தார். முறையீட்டு மனுவில் வாகன நிறுத்துமிடத்தை குத்தகைக்கு எடுத்த நபர் திரு வெள்ளையங்கிரி என்பவர் என்றும் அவர் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் திரு கமலகண்ணன் அவர்களின் சகோதரர் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், எழுத்து மூலமாக தாக்கல் செய்த வாக்குமூலத்தில் திரு வெள்ளியங்கிரி மன்ற உறுப்பினர் திரு கமலக்கண்ணன் அவர்களின் தகப்பனார் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், நகராட்சி ஆணையர் நீதிமன்றத்தில் பொய்யான வாதுரையை தாக்கல் செய்ததற்காக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 340 உடன்படிக்க குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 195—இன் உட்பிரிவுகளின்படி தண்டனைக்குரிய குற்றத்தினை செய்துள்ளார் என்று முறையீட்டு மனுவில் தெரிவித்த மனுதாரர் எழுத்துமூலமான வாக்குமூலத்தில் இந்திய குற்றவியல் சட்டம் 430 உடன்படிக்க குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 196— எனக் குறிப்பிட்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை முறையீட்டு மனுவிலும், விசாரணை வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்.

4. இந்நேர்வில், நீதிமன்றத்தில் பொய்யான தகவல்களை தாக்கல் செய்து நீதிமன்றத் தீர்ப்பினை நகராட்சிக்கு சாதகமாக பெற்றிருப்பின் அது சம்பந்தமாக உரிய நீதிமன்றத்தை நாடுவதும், மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நகராட்சி ஆணையர் உண்மைக்குப்புறம்பான தகவல் அளித்திருப்பின் அது சம்பந்தமாக தகவல் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்வதுமே, முறையீட்டு மனுதாரருக்கு மிகுந்த பலனளிக்கக் கூடியதாக இருக்கும் என்று இம்முறைமன்ற நடுவம் கருதுவதால் 2014—ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், பிரிவு 10 (4) (c) ன்படி இம்முறையீட்டு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திரு எம். கருணாகரன்,
எண்.180/32, அசோக்நகர்,
எல்லீஸ் நகர் அஞ்சல்,
தாராபுரம்,
திருப்பூர் மாவட்டம் – 638 657 .

2. நகராட்சி ஆணையர்,
தாராபுரம் நகராட்சி,
தாராபுரம் – 638 657.
திருப்பூர் மாவட்டம்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி